**சார்பு நீதிமன்றம், செஞ்சி**

**அ.வ.எண்.25/2010** **நாள்.09.02.2021**

2021-ம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 09ம் நாள் வாதி தரப்பு **2ம்** சாட்சியின் வாக்குமூலம் 1969ம் ஆண்டு உறுதிமொழி சட்டப்படி சாட்சியிடம் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு பதிவு செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | சம்பத் | தொழில் | |
| த.பெ/க.பெ. | முனுசாமி | சாதி | |
| கிராமம் | கூடுவாஞ்சேரி | மதம் | இந்து |
| வட்டம் | வண்டலூர் | வயது | 52 |

**வா.சா.2**
**1ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை**

வழக்கு வாதி பிரதிவாதிகளை எனக்கு நன்கு தெரியும். வாதியின் தகப்பனார் வரதப்ப நாய்க்கர். வரதப்ப நாய்க்கரின் தகப்பனார் பெயர் எனக்கு தெரியாது. அவருடைய பெயர் வெங்கச்சல கவுண்டர் என கேள்விபட்டுள்ளேன், பார்த்ததில்லை. வரதப்ப நாய்க்கரை பார்த்துள்ளேன். வரதப்ப நாய்க்கரின் மனைவி பெயர் கண்ணம்மாள். வரதப்ப நாய்க்கரின் உடன் பிறந்தவர்கள் பெருமாள் நாய்க்கர், மாணிக்க அம்மாள், சௌபாக்கிய அம்மாள், குள்ளம்மாள் ஆகியோர்கள் என்றால் சரிதான். மாணிக்க அம்மாளின் மகள் அலமேலு என்றால் சரிதான். அலமேலுவின் மகன்தான் நான். வாதியின் மூத்த மகளை நான் திருமணம் செய்துள்ளேன். நான் வாதியின் மருமகன். வா.த.சா.1ல் வாதி வழக்கில் தாக்கல் செய்துள்ள ஆவணம் எனக்கு தெரியும். வாதி தாக்கல் செய்துள்ள வா.த.சா.1ல் பட்டா எண்.1464ல் பெருமாள் கவுண்டர், வரதப்ப கவுண்டர் மற்றும் ரமேஷ் பெயரில் உள்ளது என்றால் சரிதான். இந்த கூட்டு பட்டாவில் ரமேஷ் த.பெ.காண்டீபன் யார் என்று எனக்கு தெரியாது. சர்வே எண்.116/7 இரண்டரை ஏர்ஸ் என உள்ளது. இந்த சொத்து வழக்கில் சேர்க்கப்படவில்லை என்ற விவரம் எனக்கு தெரியாது. ஒரு சொத்தினை சேர்க்காமல் தாக்கல் செய்த பாக வழக்கு செல்லதக்கது அல்ல என்ற விவரம் எனக்கு தெரியாது. வா.த.சா.3ல் பட்டா எண்.1464 என்ற எண்ணில் கூட்டு பட்டாவாக உள்ளது. இதில் உள்ள சொத்துக்கள் எல்லாம் பூர்வீக சொத்துக்கள்.

உடன் பிறந்த சகோதரர்களான வரதப்ப கவுண்டரும், பெருமாள் கவுண்டரும் சொத்துக்களை பாகம் பிரித்து கொண்டார்களா என எனக்கு தெரியாது. வா.த.சா.4, 5, 6ல் ஆ பதிவேடு நகல் வரதப்பன் மற்றும் பெருமாள் கவுண்டர் கூட்டு பட்டாவில் உள்ளது என்றால் சரிதான். வரதப்ப நாய்க்கர் 1990ல் இறந்தார். வரதப்ப நாய்க்கரின் மனைவி அவருக்கு முன்பே இறந்து விட்டார். பெருமாள் நாய்க்கர் எப்போது இறந்தார் என்று எனக்கு தெரியவில்லை. பெருமாள் நாய்க்கர் எந்த ஆண்டு இறந்தார் என்று எனக்கு தெரியவில்லை. பெருமாள் நாய்க்கர் மனைவி பெயர் எனக்கு தெரியாது. பெருமாள் நாய்க்கருக்கு எத்தனை ஆண் குழந்தைகள் எத்தனை பெண் குழந்தைகள் என்று எனக்கு தெரியவில்லை. பெருமாள் நாய்க்கரின் வாரிசுகள் சென்னையில் இருப்பதாக கேள்வி பட்டேன். பெருமாள் நாய்க்கரின் வாரிசுகள் இவ்வழக்கில் வாதி சேர்க்கவில்லை என்றால் சரிதான். வரதப்ப நாய்க்கருக்கு 1ம் பிரதிவாதி ஜானகிராமன் ஒரே ஆண் வாரிசு. வாதி, 2ம் பிரதிவாதி, மற்றும் ருக்குமணி ஆகியோர்கள் வரதப்ப நாய்க்கரின் குமாரத்திகள் என்றால் சரிதான். ருக்குமணி இறந்து 30 ஆண்டுகளுக்கு மேல் இருக்கும். 3ம் பிரதிவாதி ருக்குமணியின் மகள். ருக்குமணியின் கணவர் பெயர் ராஜாபாதர். அவர் உயிருடன் உள்ளாரா அல்லது இல்லையா என்ற விவரம் எனக்கு தெரியவில்லை. மாலாவின் தாயார் சிறுவதிலேயே இறந்து விட்டதால் மாலாவை 10 வருடங்கள் 1ம் பிரதிவாதி தனது பராமரிப்பில் வளர்த்து வைத்து பார்த்து கொண்டார். மாலாவின் திருமணம் விழுப்புரத்தில் நடந்தது. அதில் 1ம் பிரதிவாதியின் குடும்பத்தினர் கலந்து கொண்டார்கள். மாலாவிற்கு திருமணம் நடந்து 25 வருடத்திற்கு மேல் இருக்கும். தனது மாமனார், மாமியார் பொருளாதார வசதி உடையவர் என்றால், 1 ஏக்கர் நிலம் வைத்து விவசாயம்தான் செய்கிறார். வழக்கு தாக்கல் செய்யும்போது முத்திரைதாள் செலுத்தமுடியாது என வாதி தரப்பில் வறியவர் என சொல்லியுள்ளார்கள் என்றால் அவர்கள் கஷ்டப்படும் குடும்பத்தார்தான். ஒன்டரை ஏக்கர் நிலம் உள்ளதை மறைத்துள்ளார்கள் என்றால், அது கரம்பாக உள்ளது. மாமனார் பெயரில் லாரிகள் எதுவும் இல்லை. எனக்கு சொந்த ஊர் கூடுவாஞ்சேரி. நான் எஸ்.எஸ்.எல்.சி படித்துள்ளேன். வா.த.சா.9ல் கிரைய பத்திரத்தின்படி 296.07.1999 தேதியில் 1ம் பிரதிவாதி குணசேகர் என்பவருக்கு இந்த வழக்கில் இருக்கக்கூடிய சொத்தில் 14 சென்ட் கிரையம் கொடுத்துள்ளார்கள். அது வழக்கில் 14வது அயிட்டமாக

சேர்க்கப்பட்டுள்ளது



என்றால் சரிதான். 1999 கிரையம் ஏற்பட்ட விவரம் எனது மாமனார் மாமியார் (வாதி)க்கு கிரையம் ஏற்பட்டபோதே தெரியும். 3 வருடத்திற்குள் உரிய நடவடிக்கை எடுக்காததால் கிரையம் செய்யப்பட்ட சொத்தில் பாகம் கேட்க வாதிக்கு உரிமையில்லை என்றால் சரியல்ல. வழக்கு சொத்துக்களை நான் பார்த்துள்ளேன். மேல்சேவூர் கிழக்கு மேற்கு என சொத்துக்களை இரண்டாக பிரிக்கப்பட்ட விவரம் எனக்கு தெரியாது. மேல்சேவூர் கிழக்கு எல்லையில் உள்ள சொத்துக்கள் எத்தனை ஏக்கர் என்றால், சுமார் 4 ஏக்கர் இருக்கும். மேல்சேவூர் கிழக்கில் மட்டும் எத்தனை அயிட்டம் உள்ளது என்று சொல்லதெரியவில்லை, மொத்தம் 17 அயிட்டம் சொத்தாகும். வரதப்பனுக்கு மேல்சேவூரில் வீடு இருந்தது, அதனை என்ன செய்தார் என்று எனக்கு தெரியவில்லை. அவர் இறந்ததும் அங்கேதான். எதிர்வழக்குரையில் உள்ள விவரம் எனக்கு தெரியுமா என்றால், எனக்கு தெரியாது. வரதப்ப நாய்க்கர் சென்னைக்கு சென்றபோது அவருக்கு எவ்வளவு கடன் இருந்தது என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால், எனக்கு தெரியாது. வரதப்ப நாய்க்கர் எதற்காக சென்னை சென்றார் என்றால், அங்கு குடிநீர் வாரியத்தில் வேலை செய்தார். அவர் நிரந்தரமாக சென்னையிலேயே குடியிருந்து விட்டார். வாதிக்கு 1967ம் ஆண்டு திருமணம் நடைபெற்றது. தெய்வானை 2ம் பிரதிவாதியின் கணவர் பெயர் ஜெயராமன். அவரும் வாதியின் கணவர் கிருஷ்ணமூர்த்தி என்பவரும் உடன் பிறந்த சகோதரர். வழக்கு அ அட்டவணை சொத்துக்களை சுந்தரம் என்பவரை பயிர் செய்ய சொல்லி 1ம் பரிதிவாதி ஒப்படைத்து சென்றார். அந்த சுந்தரம் 1987ல் இறந்து விட்டார். அவரை அடுத்து பழனிசாமி பயிர் செய்தார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. சுந்தரம் மகன் ஏழுமலை இதுவரை பயிர் செய்து வருகிறார், அந்த விவரம்தான் எனக்கு தெரியும். வழக்கு சொத்தில் கிணறு உள்ளது. மின்இணைப்பு உள்ளது. எந்த சர்வே எண்ணில் கிணறு, மின்இணைப்பு உள்ளது என்று என்னால் சொல்லமுடியவில்லை. மின் இணைப்பு எண் எனக்கு தெரியாது. மின்இணைப்பின் திறன் எனக்கு தெரியாது. மின் இணைப்பு யார் பெயரில் எந்த ஆண்டு வழங்கப்பட்டது என்ற விவரமும் எனக்கு தெரியாது. அந்த சொத்துகளை நிலங்களை யார் பயிர் செய்தார் என்று அடங்கல் வாங்கி பார்த்தால் தான் தெரியும் என்றால் சரிதான். நான் அடங்கல் பதிவேட்டுகளை பார்த்து தெரிந்து கொள்ளவில்லை.

கிராம நிர்வாக அலுவலரிடம் விசாரிக்கவில்லை. 1ம் பிரதிவாதி வசிக்கும் வீட்டிற்கு



சென்றுள்ளேன். பி அட்டவணை சொத்தினை அடமானம் வைக்கப்பட்ட பத்திரம் வா.த.சா.7 மற்றும் பைசல் செய்யப்பட்ட பத்திரம் வா.த.சா.8 ஆகிய பத்திரங்கள் பற்றி எனக்கு தெரியாது. சென்னையில் உள்ள வீட்டை வரதப்ப நாய்க்கர் அடமானம் வைத்து கடன் பெற்றிருக்கிறார் என எனக்கு தெரியும். வரதப்ப நாய்க்கர் மற்றும் 1ம் பிரதிவாதி சேர்ந்துதான் வா.த.சா.7ல்தான் கடன் வாங்கிருக்கிறார்கள் என்றால் சரிதான். அடமான கடன் ரூ.15,000/- வாங்கினார்கள். அடமான கடன் வரதப்பன் இறந்தபிறகுதான் பைசல் செய்யப்பட்டது என்றால், அவ்வாறு இருக்கலாம். வா.த.சா.7 அடமான கடன் பத்திரத்திலேயே முகமதிய வக்பு வாரிய சொத்தில் வாடகை அடிப்படையில்தான் அனுபவித்து வந்தார் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால், வக்பு வாரிய சொத்துதான் அவரிடமிருந்து வரதப்பநாய்க்கர் செட்டில்மென்ட் வாங்கிருக்கிறார். வக்பு சொத்தை அனுபவிக்கதான் உரிமை உண்டு, கிரையம் வாங்கமுடியாது என்றால், செட்டில்மென்ட் வாங்கமுடியாது என்றாலும், சரியல்ல. நான் வணிகவரித்துறையில் பணியாற்றி விருப்ப ஓய்வு பெற்று விட்டேன். நான் பணியிலிருந்தபோது ஏற்பட்ட குற்றச்சாட்டினால் நான் ஊருக்கு வந்ததில்லை என்றாலும், சொத்தினை பார்த்ததில்லை என்றாலும் சரியல்ல.

**(1ம் பிரதிவாதியின் குறுக்கு விசாரணையை 3ம் பிரதிவாதி அடாப் செய்து கொள்ள அனுமதி கோரி நீதிமன்றத்தால் அனுமதி அளிக்கப்பட்டது.)**